உ

சிவமயம்.

ஸ்ரீ வேலாயுதக்கடவுள் துணை.

# அருளானந்த கீர்த்தனை

கோடைக்கானல் வாசியாகிய கன்றக்டர் - ஈலவாநாதூர்

**S. நரசிம்மலு நாயுடு அவர்கள்**

கேட்டுக்கொண்டபடி

ஷையார் சகோதரர்

**ம-ா-ா-ஸ்ரீ, S. சின்னசாமி நாயுடு அவர்கள்**

இயற்றியது.

இஃது

தஞ்சைமாநகரம் ம-ா-ா-ஸ்ரீ, தமிழ் முனிவர் இலக்கணக்

**கோவிந்தசாமி பிள்ளை உபாத்தியாயர் அவர்களால்**

பரிசோதிக்கப்பட்டு

சென்னை வன்னிய தேநம்பேட்டை

ம-ா-ா-ஸ்ரீ, கு. முருகேச நாயகர் அவர்களால்

சென்னை இராயப்பேட்டை,

உமாபதி குருப்பிரகாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1909 ஷ ஆகஸ்டு மீ

உ

சிவமயம்.

ஸ்ரீ வேலாயுதக்கடவுள் துணை.

# அருளானந்த கீர்த்தவனை.

கோடைக்கானல் வாசியாகிய கன்றக்டர் - ஏலவாநாதூர்

S. நரசிம்மலு நாயடு அவர்கள்

கேட்டுக்கொண்டபடி

அடியார் சகோதரர்

ம-ா-ா-ஸ்ரீ, S. சின்னசாமி நாயடு அவர்கள்

இயற்றியது.

இஃது

தஞ்சைநகரம் ம-ா-ா-ஸ்ரீ, தமிழ்முனிவ இலக்கணக்

கோவிந்தசாமி பிள்ளை உபாத்தியாயர் அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

சென்னை வன்னிய தேனாம்பேட்டை

ம-ா-ா-ஸ்ரீ, கு. முருகேச நாயகர் அவர்களால்

சென்னை இராயப்பேட்டை,

உமாபதி திருப்பிரகாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1909ளு ஜூலை மீ



உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

(*)

தஞ்சைமாநகரம் கோளநப்பேட்டைத் தெரு தமிழ்முனிஷி இலக்கணம்

## கோவிந்தசாமி பிள்ளை உபாத்தியாயர் அவர்கள்

இயற்றியது.

### ஆசிரியவிருத்தம்.

சீர்பூத்த வளமார்ந்த வெவ்வா[illegible]தனிற் றிகழுஞ் சீர்த்தி
தார்பூத்த வியன்சிவி வாசகன்மா லன்மேலுத் தணவாக் காதல்
சேர்பூத்த வுயர்தவத்தில் வந்துதித்த நால்வரினு ளொருமை வாய்ந்த
பேர்பூத்த நரசிம்ம வள்ளலளி மகவடைந்த பேறு சொல்வாம். (௧)

பேறறிலவ தரித்துபுகழ் கோபால சாமியெனப் பேர்பெற் றோங்கி
மாற்றுவினை யாலன்னை யிலக்குமியின் னுலகடைய மற்றை யன்னை
தேற்றிநனி யார்வமொடு வளர்க்கவவர் துநந்துவந்து தேர்ந்து மென்மேற்
சாற்றுமகக் களிப்புமீ னாட்சியம்மை தனக்குதவி சாருங் காலை. (௨)

ஆண்டொ ரைந்துவர வுடற்பிணியால் வினைகளற வாங்கு பூர்வந்
தூண்டவோ ரெழுத்து சாமிகே சவனாலுந் துயர்நீக் கொண்டு
வேண்டுமுயர் பதமளிக்கும் வேலனரு திருநாமம் [illegible]வளம்பா யென்னக்
காண்டுமெனக் கரங்குவித்து வளர்த்தவன்னை முகநோக்கிக் கழறு வானால்.

மாட்சிமையாய் மயின்மீதிற் றெய்வானை வள்ளியொடு மகிமை யாகக்
காட்சிதர வெழுந்தருள்கன் னான்மலரை யடைவனெனக் கழறி மாயப்
பூட்சியநப் பானுலகிற் புகுகின்றே னெனப்போந்த புதுமை நோக்கி
யாட்சிபெறு சீர்செவிலித் தாய்முதலோ ரதிசயமுற் றாற்றி னார். (௩)

அன்றுமுத லறுமுகனை யவர்குடும்பத் தவரெலா மன்பாய்ப் பேணி
கன்றுபிரி வுற்றதனிப் பெற்றமென மனமுருகிக் கவலிற் றேர்ந்து
நன்றுபில வங்கவாண் டுறுகார்த்தி கைத்திருவா திரையிற் றூய
நன்றுகுரு பூசைமசோற் சவநடத்தி முறைமைநவிலப் பாற்றே. (௪)

நன்மைநனி பிறர்க்குதவு நம்பிரா னிம்முகில் கார மார்ந்த
தன்மையின்னுச் சாமிதம்பி தனைநோக்கி யருட்புலமைத் தகைமைத் தாங்கு
வண்மைவடி வேற்கரனைப் பாடுகென சிரம்வகித்து வாய்மை யன்னோன்
பன்மையரு ளானந்தக் கீர்த்தனங்க ளான்றமுறைப் பகர்ந்தா னத்தை. (௫)

சந்ததமுஞ் சிவனடியார் திருக்கூட்டத் தகலாது சார்ந்து நாளும்
நந்தலிலா நாவலர்பால் நட்புகொளு நயகுணத்தின் நலமே மிக்கார்
கந்தமலர்க் கமழ்பொழில்சூழ் சென்னைநகர் முருகேச கனவா னன்பா
லந்தரு ளானந்தக் கீர்த்தனையச் சிற்பதித்திங் களித்தான் மன்றே. (௬)

திரிசிரபுரம் - S. P. Co., காலேஜி - தமிழ்பண்டிதர் ம-ா-ா-

## A. சுந்திரநாதன் பிள்ளை அவர்கள்

இயற்றியது.

---

எதுகைத்தொடை நேரிசை யாசிரியப்பா.

பூமலி தடம்பணை பாமலி த[illegible]க
மாமலி நன்மனை தாமலி நன்னகர்
அன்னப் புலவர் மன்னப் புகழும்
வார மோங்கிய சேரநா டென்னும்
நிலமகள் முகத்தின் றிலகமீ தென்னும்
நலவா நாஞ்ஞர் நிலவா வியற்றிய
நெடுந்தவப் பயனோர் வடிவிலாப் படிவமாய்
முந்நீர் வரைப்பில் வந்தனா மென்னும்
அஞ்சாக் குணத்தன் மஞ்சார் கரத்தன்
தத்துவ முணர்ந்த வித்தகப் பெரியன்
தரைமிசைப் பொருந்திய வுரைமிகு மில்லப்
பொலிதரு வாழ்க்கை வலிமிகு மறத்தான்
மேனி வாசன் மானி வாசன்
ஞானி வாசன் ஞானிவ ரன்பன்
சீனிவா சத்தார் சீனிவா சப்பேர்
தண்டார் புயத்தான் கண்டார் வியக்கும்
பொற்பினன் புகழ வற்புத னருளால்
நன்மனைக் கிழத்தியாம் இன்மக வுதித்தனர்
அன்னவர் முறைதான் நன்னயக் குணத்து
நரசிம்ம லென்னும் பாசும் மேலோன்
இத்தரை புகழும் முத்து சாமி
சொன்னயக் குதலை யன்னை யப்பர்
தன்னை மறவாச் சின்னச் சாமி
கருமா லறக்குந் திருமா லடிபணி
பெருமா ளென்னும் வருமக வாகும்
முன்ன முரைத்த பின்னமில் நால்வருள்
நாத்தமிழ் மணக்கும் மூத்தோன் கருவையில்
பிறந்தன னொருமகன் அறந்தவா நிலைக்கே
சீர்கு முலகில் பேர்சூழ் கோபால்
சாமி யென்றே நாமகப் பெரியோர்
நாம மிட்டுத் தாமரைத் தார்வம்
விஞ்ச வளர்த்து நெஞ்சங் களித்து

SEP 1909

நின்றிடு நாளில் முன்றவப் பயனே
சென்ற பிறப்பின் ஒன்றிட நின்ற
பகுப்பின் றொகுப்பின் வகுப்பே குழந்தை
எனவே யுதித்த மனமகிழ் மைந்தன்
பெற்றவர் உற்றவர் மற்றவர் மகிழ
அற்புத ஆடல் கற்புடன் காட்டி
அந்தோ சிந்தை முந்தா துலகம்
தோற்றமே யன்றி ஏற்றமி லையென
உடலெனும் பொருளை அடலமை வினையால்
இடும்பை யுறலும் அடும்பொய் யலவெனக்
காசினி யறிய மாசிலாக் காட்டென
ஈரெட்டா மாண்டில் நேரெட்டா வாதப்
பிணிதன் னுடலில் பிணிக்க நொந்தான்
ஆவா குணம்பல் மேவா விருந்த
டாலனை வருத்தும் காலனை யொத்த
நோய்தருந் துயரால் பாய்படுத் தலரும்
பிள்ளைக் கனேகம் வெள்ளம் மருந்து
கொடுத்தனர் பெற்றோர் அடுத்தில நன்றே
இத்துயர் கண்டு மெத்தவுஞ் சகியா
வித்தக மயிலூர் அத்தனு மெங்கள்
வேலனைப் பால சீலநின் நாவால்
செப்பிடின் ஒப்பறுந் தப்பிலாச் சுகமே
தந்திடும் என்றே முந்திடு குணத்தான்
மாபா ஸ்ரேத்துங் கோபால சாமி
என்னுங் கௌரி மன்னுங் குலத்து
வள்ளல் தந்த எள்ளலில் சுதனும்
கேசவப் பெரியோன் நேசமாய்ப் புகல
அம்மொழி தட்டா தம்மொழிப் படியே
நாத்தழும் பேறக் காத்திரங் குளிர
எல்லாம் மறந்து எல்லியும் பகலும்
இயம்பினன் வியப்பே நயம்நனி பெற்றான்
வாதனை முற்றுஞ் சோதனை தனக்கும்
இட்டா தம்மா விட்டே யோடின
கிஞ்சுக மென்னக் கொஞ்சிய மொழியால்
தாய்சிவ பதமுற வாய்தரு மருளாற்
றந்தைக் கொருதவ முந்துதா ரமுமாகித்
தன்னை யோருயி ரென்னக் காத்திடுந்
தாயினு மாயிர மேவிய மடங்குயர்

ஆகிலம் புகழத் தருமுயர் சால்புசேர்
திருமகள் பொருவு மருவின் மீனாட்சி
யம்மையார் முகத்தைச் செம்மையாய் நோக்கி
அஞ்ச லென்றுயே கொஞ்சமுஞ் சோக
எதுவே யில்லை வாறுவல் வினையெலாம்
முருகன் அருளால் ஒருசிறி தின்றி
யிற்றது பெருஞ்சுக முற்றதென் றியம்பி
உள்ளக் கலக்கைக் கொள்ளா தகற்றி
யின்பஞ் செய்தான் பொன்பயில் குணத்தான்.

அஃதான்று.

தந்தையின் கரத்தார் விந்தையாங் கனிக்கே
கோபங் கொண்டே தாபந் தவிர்க்குந்
சத்தி கிரியிற் பத்தியாய்த் தொடர்ந்த
பழனிமா மலையின் பழையதாஞ் சீர்சேர்
கொர்டைக்கான் மலையிடை நடைப்பயில் தன்மையோ
கும்பனுக் கருள்செய் நம்பன் குமரன்
நாட்டம் நோக் கேட்டம் பெருக
காட்சிதந் தருள மாட்சிமை பெற்றன்
சின்று ளிவ்வணம் பன்னரும் புவியில்
சொல்லருஞ் சுகமே பல்லரும் புகழப்
பெற்றுப் பற்றெலாம் முற்றும் மற்றேற
வேலவன் பதத்தைக் காலமெல் லாமு
முச்சரித் தண்டையி லிச்சையோ டிருந்தோர்
இரும்பூ தடைய அரும்போ தகத்தோர்
செய்நெறி காட்டி மெய்நெறி தேடிக்
குமர னழைக்க வமாருக் கெட்டா
மயிலூர் வேலன் செயிர்தீர் பதத்தை
பிலவங் காவினில் நலமங் கார்ந்த
கார்த்திகை மதியில் நேர்த்திசேர் திருவா
திரையா நாளில் உரைதா வடைந்தான்
அன்னவன் றன்மை யின்னருங் கீர்த்தன
மென்று தாதையும் நன்றுசெய் கேசவத்
தக்கோன் றனும் மிக்கா தாஞ்சேர்
கூனிமி வில்லான் தானிவ னென்னும்
சினிவா சன்றனை மாணிலை விற்கொளும்
அவர்மேலு மங்கை யலர்புகழ் காட்டும்
அலமே லெனும்பேர் நிலம்புகழ் அம்மை
மனமிகக் களிக்க வினமிகத் துதிக்க

வந்த புதல்வனுஞ் செந்திரு மகனோர்
சின்னச் சாமியாந் தன்னிளஞ் சோதரன்
றன்றவப் பயனே யென்று மகிழ்விற்கொள
செய்தி டென்ன மெய்ப்படு குமரன்
றன்னருள் கொண்டே நன்னயு மாக
நவின்றன னதனைக் கவின்பெற மகிழ்ந்து
எழுத்துச் சொற்பிழை வழுத்து கரப்பிழை
இல்லா திருக்கச் செல்லார் கரத்தன்
நால்வருக் கருளிய மாறரு பாகன்
தந்தரு ளாகம வந்தமு நந்தா
தறிந்து நானிலம் நெறிப்படச் செறித்தே
[illegible]வரும் புகழ மேவருஞ் சீரே
யோங்குந் த[illegible]யாம் பாங்குசார் தலத்தமர்
கோவிந்த சாமி மாவிக் தைத்தோள்
சாரும் புலவன் சேரும் படியே
திருத்த வருத்தியால் பொருத்தமா மச்சில்
சென்னைவாழ் தன்னைநேர் நன்னய சீலன்
முருகே சப்பேர் ஒருபெரும் புலவன்
தண்ண ணுலகில் நண்ணும் மக்கள்
கந்த னருள்பெற் றந்தமில்
சுகமுற வச்சில் நகப்பதித் தனனே.

---

புதுக்கோட்டை ஸமஸ்தானம் ம-ா-ா-ஸ்ரீ, மகாராஜா அவர்கள்
காலீஜ் - லேட் - தமிழ்ப்பண்டிதர் P. சரவணப்பிள்ளை குமாரர்

## தமிழ் முன்ஷி - S. பத்மநாப பிள்ளை

இயற்றியது.

---

### நிலமண்டில ஆசிரியப்பா.

பூம்புயல் வளமலி பொலிவுறுங் கற்பக
மாம்பொழி லார்ந்த வரும்புனல் நதிசூழ்
எலவா னூர் எனும்பதி யதனில்
சிலவா வுயர்குண நிறைந்த நீணெறி
வாய்ந்த சீனி வாசக வுபாத்திமை
யெய்த நற்பூபன் எழிலா ரவர்க்கும்
அருந்ததி யன்ன அலமே லென்னப்
பொருந்திய பேர்தவப் புண்ணிய வதிக்கும்

உதித்தனர் நால்வ ருயர்மகிழ் வெய்த
மதித்த நற்குண மாண்பினி துற்று
தெய்வத் தியானமுந் தேவதா பூசையுந்
தெளிவுற வுணர்ந்து தெண்டா யுதனை
வழிபடு வார்மனம் வாக்குக் காயும்
பழிபடு நெறிசெலா பாங்கி னோக்கு
நானிலம் புகழும் நடம்புரி வாக்கி
நால்வரின் முதல்வர் நரசிம்ம நாயுடும்
பார்புகழ்ந் திடுகுண பண்பினில் வாய்மைச்
சார்நல்ல முத்துச் சாமி நாயுடும்
ஆகிய விவர்தமக் காம்பே ரன்னை
வாருட னீன்ற மகவாம் வள்ளல்
நாடிடு மெவர்க்கும் நலமே புரியுங்
கேடிலாச் செல்வ கேசவ நாயுடும்
அன்பா யனுதின மறுமுக வேலனை
இன்பாய்த் துதிக்க விசைப்பதம் பாடென
சீரணி யருளுஞ் செல்வமுற் றோங்கிசை
தாரணி சின்னுச் சாமி நாயுடு
முன்னோர் மொழியை முதலெனக் கொண்டு
அன்புட னுருகி அறுமுகன் றன்மே
லாரிரு ளகல வருளா கந்தக்
கீர்த்தனை பாட நேர்த்தியா யதனை
விஞ்சையர் புகழும் வித்துவ சிரோன்மணி
தஞ்சை கோவிந்த சாமி நாவலன்
சொற்பொருள் கண்டு சுவைபட கிறத்தி
சொற்களை யாய்ந்து தகவறத் திருத்தி
திருமக ளிலகுஞ் சென்னை நகர்வாழ்
முருகொளிர் வாச பூநகேச கர்யகர்
சீரொளிர் பல்வளஞ் செழித்தாங் கெய்த
பார்புக ழச்சிற் பதிப்பித் தனனே.

முற்றிற்று.

---

# அவையடக்கமும் ஆக்கியோன்பெயரும்.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சைதன்ய சொரூபரா யெழுந்த எம தாண்டவராகிய சிவசுப்பிரமணியக் கடவுளினது திருவருட்கடலிலாழ்ந் துள்ள சற்சன சாதுக்களனைவர்களுக்கும் அறிவிக்கும்

## அடிமை சிறுவிண்ணப்பம்.

தென்னாற்காடு ஜில்லா எலவானாசூரின்கண் வசித்துவந்த வெள்ளிகுலத்து தித்த கா-சீனிவாசலு நாயுடு அவர்கள். புத்திரர்கள் நால்வர்களுள் முதல்வனா யுள்ள நான் என் சகோதரர் மூவருள் கடைசி தம்பியாகிய பெருமாள்நாயுடை எங்கள் கிருகத்தில் எங்கள் மாதாபிதாக்களுக்கு உதவியாக இருக்கச் செய்து மற்ற தம்பி மார்களாகிய முத்துசாமி நாயுடையும் சின்னுசாமி நாயுடையும் தத்தம் குடும்ப சகிதமாய் அழைத்துக்கொண்டு 1870வரு- க்கு தமிழ் விஷு வருஷம் கார்த்திகை மீ" தில் கொடைக்கானல் மலைக்கு ஜீவனுமிஷையின் பொருட்டு வந்து சேர்ந்த இந்தஇடத்தில் கந்தனருளால் ஓர் பெண் மகவை யும் ஆண் மகவையும் பெற்று மகோற்சவங் கொண்டாடி மனமகிழ்ந்து நிக ழுங் காலத்தில் மக்களை ஈன்ற என் மனைவி லட்சுமி பரமபத மடைந்தாள். மாதாவற்ற மக்களுக்கு ஆதாரவாக மற்றொரு மாதை மணந்து குற்றமில்லா மல் கூடிவாழ்நாளில் என் ஆண் மகவாகிய கோபால்சாமிக்கு 18-ம் ஆண்டில் கன்ம வினைப்பயனால் வாதரோய் தோன்றிட வைத்தியர்களாலும் என்னா லும் மேற்கண்ட ரோயிக்கு செய்யவேண்டிய சிகிச்சை யெல்லாம் செய்தும் ஆகுதியில் நெய்சொரிவதைப்போல் வியாதியானது அபிவிர்த்தியாகி பாலன் பாதவிக்கிறதைக் கண்டு நானும் என் குடும்பத்தாரும் விசனமுற்று மனங்க லங்கி மெய்மறந்து சோர்வு அடைந்திருக்கையில் என்பேரன்னையின் குமா ரன் கோ-கேசவலு நாயுடு அக்குழந்தையின் அருகில் வந்து அப்பா கோ பாலா நீபடுகிற பாதை நீங்க வேலாயுதனை தியானஞ்செய் சுகப்படுவாயென அவ்வாறே அப்புத்திரன் தியானம் செய்துக்கொண்டும் பட்டுதேவி பூதிபரந்து தேவல் பிணிகள் விட்டுதே குளிர்காந்தல் விராலிமலை வேலோனே என்றும் வேலாயுதனே விளங்கு மயில் வீரனே காவாயுதம் படைத்த கையனே சால பருத்த மயிலேறி வரும் பாகா பிரானே எனக்கு ஒருத்தரில்லை. நீரே துணை யென்றும் அகோராத்திரம் வேலாயுதம் வேலாயுதம் வேலாயுதம் என்று நாவி னால் உச்சரித்து துதித்து தனது வாழ்நாள் முடிவை யுணர்ந்து தனது செவிலித்தாயாராகிய மீனாக்ஷியை அம்மாவென் றழைத்து இனி சும்மாவிருக் கலாகாது நான் கோவிலுக்குப் போக வேண்டும் ஜலம் தயார் செய்யுங்கள் நான் ஸ்நானம் செய்துக்கொண்டு கோவிலுக்குப் போகிறேன் நீங்கள் அழு

காதீர்கள் விசனப்படாதீர்கள் என்றும் வேலாயுதனைப் பணியுங்கள் மேலாம் பதம் எகத் துணியுங்கள் என்றும் உரைத்து பிலவங்கவருஷ கார்த்திகைமீ திருவாதிரை நக்ஷத்திரத்தன்று வேலாயுதம் என்று சொல்லிக்கொண்டே வேலாயுதக் கடவுள் திருப்பதம் அடைந்தான். அன்று முதல் அந்த பக்தசிரோன்மணிக்கு ஸ்ரீ வேல்தாசர்யென நாமகரணம் சாற்றப்பட்டது.

கடந்த யோகியும் மறப்பரோ மக்கள்தன் காதல் என்பதை போல் யோகீஸ்வரர்களும் கூட மக்களாசை மறக்க அரிதாயிருக்க அடியேன் புல்லறிவுடையோன் மறக்க வகையறியாதவனாகிய நான் என்மகனை நினைந்துருகி வாடி மதிமயங்கி பேயனைப்போல் புலம்பி பரிதவித்து என்மூன்றாவது தம்பியாகிய சின்னாசாமி என்பவனை அழைத்து நீ சிவசுப்பிரமணியர் அருளால் சிலகீர்த்தனங்கள் பாடிக்கொடு நான் அதை பாடி பஜனை செய்துக் கொண்டாவது கோபால்சாமி பிரிவினால் நான் படுந்துயரத்தை தீர்க்கிறேன் என்று ஆக்யாபித்தேன். அவ்வாறே ஷை என் தம்பி சின்னாசாமியால் இயற்றிய இவ்வருளானந்த கீர்த்தனைகளை சில வித்வசிரோன்மணிகளைக் கொண்டு பிழை திருத்தப்பட்டு திருவருளை முன்னிட்டு இக்கொடைக்கானல் மலையில் என்கிருகத்திற்கு அடுத்தமைந்துள்ள மடாலயத்தில் வேலாயுதக் கடவுள் திருவுரு படம் அமைத்து சிலசற்சன சாதுக்களோடும் ஒவ்வொரு சோமவாரத்திலும் மாதாந்திர திருநக்ஷத்திரத்திலும் பஜனை செய்து வருவதோடும் வருஷாப்திய குருபூஜை மஹோற்சவமும் கொண்டாடி வருவதால் இந்தக் கீர்த்தனை அச்சிலிடத் துணிந்தேன். இதில் எழுத்துக்குற்றம் சொற்குற்றம் பொருள்குற்றம் முதலாகிய குற்றமிருப்பினும் எம்பெருமானது ஸ்தோத்திர மாலையால் மஹான்கள் பிழைபொறுத்து அங்கீகரித்து கொள்வார்கள் என்று நம்பி நமஸ்கரிக்கின்றேன்.

இப்படிக்கு.

S. நரசிம்மலு நாயுடு.

உ

சிவமயம்.

கணபதி துணை.

வேலாயுதக்கடவுள் துணை.

# அருளானந்தகீர்த்தவனை.

## வெண்பா.

சீர்பரவுங் கோபாலன் சித்திபெற வாண்டமணித்
தார்பரவு வேன்முருகன் றண்மலர்மேற்—பார்பரவுங்
கீதகடை யாகவருட் கீர்த்தனங்கள் பாடகனை
நாதனருட் கொள்வேன் நயந்து.

கீர்த்தனம் - பல்லவி - இராகம். காம்போதி - தாளம் - திரிபுடை.

ஓம் கணபதியே ஓ தயாநிதியே.

## அநுபல்லவி.

ஆமு மவ்வு மவ்வுட னுவ்வுத்
தாமுறுந் திருவுரு தனிமுத லாம் ஸ்ரீ (ஓம்)

## சரணங்கள்.

1. மூலா தாரத்தி லமர்ந்தபொற் பாதா
மூவுலகுக் கொரு தாரக நாதா
நாலாம் பதமடி யார்க்கரு ணீதா
நால்வர்செந் தமிழ்மறை நாவுறத் தாதா (ஓம்)

2. நித்தியா னந்தம தானவ னுதி
நிகழ்பிர ணவப்பொருண் மோனநற் சோதி
முத்தியா னந்தமெய் நிலைதனை யோதி
மூஷிக மேறிவந் தருள்புரி நீதி (ஓம்)

3. மணமெனுங் கூடத்தி னிணைக்கட்டுந் தறியே
வாய்க்கத் திருவருள் செய்யத நெறியே
கனமெனும் பூம்பதத் தொடுங்கவைம் பொறியே
காருமைக் கரனேவெம் பவமறப் பறியே (ஓம்)

4. சற்குணமுளத் தமைக் காதவோர் பாவி
சந்ததம் பணிகுவன் சந்நிதி மேவி

விற்குண வேற்ருச னுள்த்தி னுலாவி
வீடளித் தவன்றுதிக் கருளவா தாவி (ஓம்)

---

சரஸ்வதீ - ஸ்துதி - வெண்பா.

அந்தமதிற் கோபால னன்பனுக்கோ ரின்பமுத்தி
தந்தவடி வேலவன்றன் ருண்மலரைச் சந்ததமும்
பாடிக் கனிந்துமுடி பாரதியா ளம்பொனடி
நாடியண்ணிந் துய்வேன் நயந்து.

---

கீர்த்தனம் - இ-ம். இந்துஸ்தானி - தாளம்—ஏரடி.

பல்லவி.

சாரதா மாதா உனை போற்றினேன் சாரதா.

அநுபல்லவி.

கோதா யன்பருளம் நேர்மைசெய் வாணியே
நாரதா தியர் புகழுஞ்—சாரதா (மாதா)

சரணங்கள்.

1. சண்முகன் றுதிசொல த்தாயெநீ வரமருள்
உண்மூக மாய்த் துதித்தேன்—சாரதா (மாதா)
2. நாவிற் குடியிருந்து நான்மறை யுரைசெய
சேவித்தே னுன்றன் பதமே—சாரதா (மாதா)
3. குஞ்சரி லோலனைக் கூர்வடி வேலனை
ரஞ்சித மாகப் பாடிட—சாரதா (மாதா)
4. வேலென மொழிந்தகோ பாலனை யாட்கொண்ட
பால சண்முகனைப் பாட—சாரதா (மாதா)

---

வேலாயுதக்கடவுள் துதி.

## கட்டளைக்கலித்துறை.

ஐயாநின் பாத மநுதினம் போற்ற வடியவனுக்
கொய்யார மான மயிலேறி வந்தெ,தற் குதவிசெய்வாய்
வையா புரியா வினன்குடி மேவியே வாழ்முருகா
செய்யாத புன்பிழை யான்செய் தினுமருட் செய்குவையே.

---

கீர்த்தனம் - இ-ம். செஞ்சுருட்டி - தாளம் - திரிபுடை.

பல்லவி.

பிரணவப் பொரு ளுரைத்தசண் முகனே—பிரமன்
ஹரிஹரன் கேட்கவே ஹர ஹர ஹர—ஓம் (பிரண)

அநுபல்லவி.

அருண கிரண பூரணு னந்தா
ஐயனே தூய்யனே பன்னிரு கையனே—ஓம் (பிரணவ)

சரணங்கள்.

1. தரணியி லன்பர்க் கானதா யகனே உயர்
தையல் வள்ளிதெய் வானை நாயகனே
இரணிய சம் ஹாரன் மருகா இரங்கியே யின்னருள் தருவாய்
இப்போததி அப்பாகதி செப்பீரநிதி முற்பாதுதி—ஓம் (பிரணவ)

2. இறையவர்க்குப தேசஞ்செய் தவனே வானோர்
இடுக்கணீங்கவே லதனையெய் தவனே
குறைகள் செய்தவெள் ளைவீற் குகந்த
குகனே யறு முகனே [illegible]ர் பவனேவே லவனே—ஓம் (பிரணவ)

3. அருமையாறு தலத்துறைந் தவனே அன்ப
ரகமேவாலய மாகக்கொண் டவனே
எருமைவாகன னெனைத்தொடாமலே
இருமென் றருண் முருகாதிரு குறமாதுடன் வருவாய்—ஓம் (பிரணவ)

4. திங்கள்கங்கை சூடியோன் புதல்வா ஆன்ற
தேவதேவ ரியாவர்க்கு முதல்வா
மங்கைஞ்சேர்கோ பாலனே யாண்ட
மகிழ்சோலைசூழ் பதியாகிய திகழாவினங் குடிவாழ்பவா—ஓம் (பிரண)

---

கீர்த்தனம் - கியால் - மெட்டு - தாளம்—ஆதி.

பல்லவி.

கந்தாநின் திருநாம மெந்தநாளுந் துதிக்க
சிந்தை யெனக்கருள் செய்வாயே. (கந்தாநின்)

அநுபல்லவி.

மந்தா கினிபாலா சுந்தர வடிவேலா
வந்தாண் டருள்சுரர்களுக் கனு கூலா சீலா (கந்தாநின்)

சரணங்கள்.

1. குமர குருபரனே கூர்வடிவேற் கரனே
குஞ்சரி லோலனே கூத்துடனே
கமலையின் மருகோனே கார்த்திகேயா குகனே
கருணு ரகனே யென்முன் வருவாய் சண்முகனே (கந்தாநின்)

2. அமரர் குறைதவிர்த்த ஆதிமத்தி யாந்தகா
அஞ்சலென் றடியவர்க் கருள் தியாகா

குமரக்கோட்டத் தமர்ந்த குருபர நாதா
குறத்தி மணாளா கூறுங் கணாளா (கந்தாகின்)

3. தீராப் பிறவிப்பிணி வாராதெனைக்கண் பாராய்
வீர வேஷங்கொள் சூர சம்ஹாரா
ஆரா வமுதெனக்குத் தாராய் திருப்போரூரா
சீராய் குருவுருவாய் வாராய் ஞானசுந்தரா (கந்தாகின்)

4. கோதிலா துன்றுமங் கோரின கோபாலன்
குரைகழல் சேரமுத்தி யளித்தவனே
ஓதிம மீதுவா வேத வேதாந்தனே
உனைநம்பு மெளியேனுக் குதவுமெங்கோனே (கந்தாகின்)

---

கீர்த்தனம் - இ-ம் சாப்பு தாளம்.

பல்லவி.

ஐயா வடிவேலேந்துங் கையா சிவாசலசுப்
பையா நீ வரமருள்வாய்.

அநுபல்லவி.

வையார வணிவோன்பாலா மெய்யாகிய சத்திவேலா
ஒய்யாரமா மயில் சீலா ஐயனே மூலா
வையமென் கவலைநீங்க வையகம் புகழ்மே லோங்க
வாராய் சீராய் காராய் நேராய்
பாராய் களி கூராய் வீராய் (ஐயா)

சரணங்கள்.

1. அத்தனுமை மகிழ்மைந்தா
சித்தமகிழும் வரந்தா
சுத்தபவுத்தரா நந்தா
வெற்றிவேற் கந்தா
நித்தமுமுனைப் பணிவேன் அத்தனே நீ யாண்டருள்வாய்
பத்தி சித்தி முத்தி பெற்ற
பத்தர் சித்தர் முத்தர் துதி (ஐயா)

2. கண்ணன் மருகா முருகா
அண்ணாமலை குரு வுருவாய்
எண்ணிய வரந்தருவாய்
என்முன் வருவாய்
விண்ணுடர் போற்றுந்திவ்ய வேலா யுதந் தாங்கிய
வேதா கீதா நாதா போதா
நீதா யாதா தாதா பாதா (ஐயா)

3. அம்புலியுங் கங்கையு
மின்பமாய் சடைமீதணி
உம்பர்கள் போற்றிடுஞ்சிவ
தம்பிரான் பாலா

செம்பொற் பாதச்சிலம்பு சோதி பளபளென்னும்

தேவா மூவா தூவா நாவா
கூவா தேவா மாவா காவா (ஐயா)

4. கோரு மவர்கள் வினை
திரும்படிக் கருளும்
ஆறுமுக தேசிகா
காரும் வேலா வா வென்று

நேரு முறைசெய்நற்கோ — பாலனை யாட்கொண்ட

நேசா வாசா காசா தேசா
ஈசா வீசா பிர காசா (ஐயா)

---

## தேவாரம்.

அயிலானை யன்பரகத் தமர்ந்து ளானை
ஆதிமறைப் பொருளயற்கு கருள்செய் தானை
மயிலானை மாநிலத்தை வலம்வந் தானை
மாற்றலரை வதைத்தமர கதவே லோனை
ஒயிலானை வள்ளிதெய் வானை கோனை
யும்பர்வாழ் வினையுதவு முப்புடை யானை
குயிலானை கோபாலன் றனையாண் டோனைக்
கூறாதார் நாவதுவுங் குறைநா வாமே.

---

கீர்த்தனம் - இ—ம். புன்னாக வராளி - தாளம் — ரூபகம்.

பல்லவி.

குருபர னெனவரு சரவணபவ குணி மயிலா குவலயத்திற்
கொடுமைசெய் யவுணர்தங் குலமறுத்திடுங் கூ ரயிலா.

அநுபல்லவி.

குகனறு முகனென வருகும நேசா
கொடுவினை யெனைத்தொடா தருள்வள்ளி நேசா
இகபர சாதன மெனக்கரு ளீசா
இப்புவி தனிலன்ப ரிருதய வாசா சிவ (குருபர)

சரணங்கள்.

1. சுத்தனே நின்மல சத்திவே லாயுத தேவா உன்றன்-பொற்பாதம்
கர்த்தனே நானிக்குமென் சித்த மகிழ்ந்திடவே-வாவா
சுரர்முனி வோரனு தினந்துதி வேலா
சுப்பிர மணியசு கானந்த லோலா
பாமுருகா சண்முகா பார்வதி பாலா
பதமனம் பற்றுவோர்க் கிதமனு கூலா சிவ (குருபா)

2. அண்டமு மகண்டமும் பண்டு மறையும்புகழ் பாதா நின்பக்தர் தமை
சண்டனுங் கண்டியர் தொண்டுசெய் வானதி ருதா
அகில புவனத்துள்ள வாத்தும கோடி
அப்பனே நின்பத மன்புட னாடி
சகல வினைகள்களை வார்பதம் பாடி
தமியேனு நினை யடைந் தேனுளம் வாடி சிவ (குருபா)

3. அயனரி சிவன்முத லானவர்க் கருள்புரிந் தோனே-அருமறையின்
அந்தமுழும் பொருளாயொளி யாய்விரிந் தோனே
சயமுக னுக்கிளைய கருணைப் ரவாகா
கந்தனே கார்த்தி கேயனே யோகா
நயமுற வொருமனை தாய்ப்பணிந் தேன்கா
காயனி வள்ளிதெய் வானையின் பாகா சிவ (குருபா)

4. பண்டு வேலாயுத மென்றகோபாலனைக் கார்த்தாய் பகரும்நிலை
கண்டுதன் பக்கலிற் கொண்டவனைப் பதஞ்சேர்த்தாய்
விண்டல மண்டல மெண்டிசை யேத்தும்
வேந்த ராதியோர் சாந்தமாய் போற்றும்
தொண்ட ரவர்களுக்குப் பிறப்பினை மாற்றுந்
தோகை மயில்வாக னுவெனச் சாற்றுஞ் சிவ (குருபா)

வெண்பா.

வேலா யுதனே விளங்கு மயில்வீரனே
காலா யுதம்படைத்த கையனே-சீலா
பருத்தமயி லேறிவரும் பாகா பிரானே
ஒருத்தரிலை நீயே உரை.

---

கீர்த்தனம் - இ-ம். மோகனம் - அடதாளம்.

பல்லவி.

சடாக்ஷரத் திருமந்திரம் அது
சகல பாவங்களைப் போக்கிட தந்திரம்

### அநுபல்லவி.

கடாக்ஷம்வைத் திகபர காமி யமும் நல்ல
காட்சியு மளித்திடுங் கருணை சரவணபவ (சடாக்ஷர)

### சரணங்கள்.

1. தேவர் முனிவர்களி னிடரதைத் தீர்க்குந்
திருவடி துதிசெய்தோர் திருக்கண்ணாற் பார்க்குந்
தாவி வருமறலி பாசத்தைப் போக்குந்
தஞ்சமெனும் பக்தரை யஞ்சலென் றேர்க்குஞ்
சகல் புவியும் புகழ் தலைவனைப் போற்றுவோர்
இகமொழித் தகற்றிமேற் றிகழ்பதந் தருமது (சடாக்ஷர)

2. ஆகம வேதத்தி னந்தத்தில் வளர்ந்திடும்
அன்பர்க ளுளமதி லின்பமாய் நிறைந்திடுஞ்
சோக முழுதுமறத் திருவருள் புரிந்திடுந்
திவ்விய தேசோன்மய மாயருள் சுரந்திடும்
ஜெகமதை நொடிவலம் வருநும ரேசனை
அகமதி லெண்ணுவோர்க் கானந்த முதவிடுஞ் (சடாக்ஷர)

3. பரமனும் பருவதன் மகள்மகிழ்ந் தளித்தது
பண்புடன் சரவணப் பொய்கையிற் குளித்தது
கரமதில் வேற்கொடு கமழ்மணங் களித்தது
காதலுடனே திரு நீற்றைமேற் றுளித்தது
கஞ்ச மலர்வதன வின்சொல் லாங்குற
வஞ்சி குஞ்சரி யோடே செஞ்சொலாற் பகர்ந்தது (சடாக்ஷர)

4. அத்தி முதற்கிளைய அறுமுக வேலனை
பத்தியுடனே பணிந் துற்ற கோபாலனை
சித்த மகிழ்ந்து பதமளித் தழைத்த சீலனை
உத்த மனைச்சிவ சத்தியின் பாலனை
ஓதுவோர் பாதகத் தீதொழித் திடுமது (சடாக்ஷர)

### வேறு சந்தம்.

திருமா துமை நேச ரரி சிவனு மகிழ்பரனை —
தருமா தினை புனமா துதெய் வானைபுகழ் தானை
உருவா கத்தன் னுளத்தே வைத்தல் குகந்தகோ பாலவனை
பரமா கதற் பதமே யருள் பதிவேலனை புகழ்வாம்.

---

### கீர்த்தனம் - இ-ம. நீலாம்புரி - சாப்பு தாளம்.

### பல்லவி.

கந்தநாதா உன் றனருட் கண்ணால் நோக்குமே — வரந்
தந்து தாமரைப்பத மென்சொந்த மாக்குமே.

### அநுபல்லவி.

சிந்தை நைந்துருகி வாடிநின் சீரைப் பாடினேன்
பந்தமறச் செய்யெனப்புகழ் பரவி நாடினேன் மறைப்
பண்ணும் வேதா மலர்ப்பாதா லோகநாதா நீரிவ்வேளை (கந்தநாதா)

### சரணங்கள்.

1. கோதிலாத தெய்வயானை குஞ்சரி லோலா நல்ல
குமரகுரு பரனே பரங் குன்றில்வாழ் சீலா
ஆதிசிவ னுந்தைக்குமுன் னருள்செய்த மூலா
அன்புடையோர்க் கின்புதவு மறுமுக வேலா வல்ல
அண்டர்தினங் கண்டுபணி தெண்டாயுத னாகநிற்கும் (கந்தநாதா)

2. வாசவன் புகழ்மருகா வந்தெனைக் காராய் வெகு
நேசமுட னுன்றன்பதம் பூசித்தேன் பாராய்
ஆசா பாசா மதையகற்றி யருள் தனைத் தாராய்
அன்று தேவர்த மிடரைத்தீர்க்க வழிசெய்த வீரா மிக
வன்பாய் முன்பா யென்பா லின்பா யருள்வா யென்னேராய்(கந்)

3. மூலமலத் தாலே நானே மோசம் போனேனே அந்த
காலனுக்கா ளாகுவேனோ கார்த்தி கேயனே
சாலவேநின் சரணமலர் தானடைந்தேனே
சச்சிதா னந்த மூர்த்தி யான சத்தி வேலோனே அருள்
தாராய் சீராய் வாராய் காராய் தானவர் சம்ஹாரா (கந்தநாதா)

4. வேலாயுத மெனமொழிகோ பாலனைத் தானே நன்றாய்
நாலாம்பத மீதுவைத்த நாவலர்கோனே
சூலாயுத னுமைமகிழுஞ் சுதனே யெம்மானே
சூரரை வென்ற சுப்பிரமணி யப்பெருமானே திருச்
செந்தில் வந்த வெந்தையேநீ வந்தாளென் றேனே (கந்தநாதா)

### வேறு சந்தம்.

ஆமாம் புக ழருள்வே லர்தா மமர ரிடர்தீர்த் தாங்கே
தீமாங் குடிலை யதற்குப்பொருள் சிவனுக் குரை செய்தார்
சோமா மைமா மயில்மேல்வந்து கோபாலனை யாண்டார்
நாமாமவ ரடிமை நாளும் நாடித்துதி செய்வாம்.

---

கீர்த்தனம் இ-ம். தன்னியாசி ஆதிதாளம்.

### பல்லவி.

காட்சி எனக்கருள்வாய் நல்ல
திருவே காவே எந்தக்காலமுங் கோலமார் (காட்சி)

### அநுபல்லவி.

மாட்சிமையாகவே மாமயிலேறியே
மாதுதெய் வானைவள்ளி மகிழ வுலாவரும் (காட்சி)

### சரணங்கள்.

1. அபிஷேகஞ் செய்தாடை அலங்கரித் திருப்பதும்
அடியவர் களிப்புற வருட்காட்சி கொடுப்பதுந்
தவமுடையோர் நின்னிரு தாள்தொழு தேத்துவதுந்
தங்கவேற் கரமொடு சங்கத் தொனி செய்வதும்
தண்டையுங் கிண்கிணி யெண்டிசை யுமதிர
தொண்டுசெய் பக்தர்கள் துதிப்பதும் நான்காண (காட்சி)

2. சுற்றித் திருமலையைச் சூழ்ந்தத் திருக்கூட்டமும்
நற்றவர் குழாக்கூடி நடிக்கின்ற ஆட்டமும்
சித்ர காவடியுள்ளோர் சேர்ந்துசெய் கோஷ்டமும்
தித்திமத் தளவீணை திகழ்வாத்ய பாட்டமும்
செப்பொணு அற்புதத் திப்ரமை கொண்டுநான்
அப்பனே தொழுதுநின் னடியிணை பூசிக்க (காட்சி)

3. ஆதி சேடனாலும் புகழொணுச் சோதியாய்
ஆனந்தமான சுகவனு பூதியாய்
சாதுசற் சனர்க்கருள் தயாபர நீதியாய்
சமரபுரிக் கதிபதியாய்ப் பிரக் கியாதியாய்
சங்குடன் சுடர்வடி வேலுந் தண்டாயுதந்
தாங்கி யுல்லாசமாய் தானெழுந் தருளும் நின் (காட்சி)

4. ஒதவு மரிதான வுன்பாத கமலத்தை
நீதமுடனே நின்று சிர்ச்சிந்தை யாய்துதிக்க
நாதனே யென்றடி யார்காணும் பூசிக்க
சீதிலா முனிவர்கள் துதியார வாரிக்க.
ஜெயமெனக் கோபாலன் கயமுட னுரைப்பதுந்
தயவாயுன் கரமுவன் புயமீதுற் றதுங்காண (காட்சி)

### வேறு சந்தம்.

வாரூர் பொற்பூண் வள்ளியும் தெய்வானையையு மணந்தோன்
போரூர் வளர்பொலி வார்ந்துற்ற புனிதன் பக்தர்க் குகந்தோன்
பாரூ ரகன்றிடக் கோபாலன் பதமெய்திட வளித்தோன்
சாரூர் திருத்தணி வேலன்றன் றுன்தொழுவா மியாமே

---

கீர்த்தனம் இ-ம். முகாரி - சாப்புதாளம்.

பல்லவி.

சத்திவடி வேலா பக்தரனு கூலா

அநுபல்லவி.

முத்தியருள் சீலா அத்தனருள் பால லோல (சத்தி.)

சரணங்கள்.

1. தஞ்சமென வுன்றன் றுள்பணிந்தேன் கோவே
அஞ்சலென்று காக்க ஆறுமுக தேவே வாவா (சத்தி)

2. மாது வள்ளிநேசா மாமயிலூர் வாசா
ஓதுபுவநேசா ஒளிர் பிரகாசா தேசா (சத்தி)

3. கங்கை யருள் மைந்தா இங்கித வரந்தா
துங்கமுறுங் கந்தா தூயசிவன் மைந்தா வந்தாள் (சத்தி)

4. வேத முதலோனே காதலுட னேனே
பாதந் தொழுதேனே வாதை தீர்க்குங்கோனே தேனே (சத்தி)

5. சேவற் கொடியோனே ஆவலுட னேனே
கூவி யழைத்தேனே சேவைதா வேலோனே வானே (சத்தி)

6. செந்திலாதிபனே கெண்டஞ்செய் கின்றேனே
தந்தைதாய் நீதானே தனையனும் நானே கோனே (சத்தி)

7. நத்தி நின்றேன் தேவா இத்தரி நீ வாவா
பத்தனெனைக் காவாய் வெற்றிப் பிரதாப பூபா (சத்தி)

8. ஆவலாய் அழைத்த கோபாலனைக் காத்த
நாவலா ரினிதேத்த நாடுமா குலோத்த நீத்த (சத்தி)

வேறு சந்தம்.

அடியார்க் கெளியவன் தேவர்கட் கான விடமொழித்து
குடியா கத்தன் பக்தருளம் கூடி தமிழ்குமரன்
படிவாழ்வினை வெருக்தநற் கோபாலன் றனையழைக்க
நடியா னின்ற மயின்மேல் வந்த நாதன்கழல் துதிப்பாம்.

---

கீர்த்தம் - இராகம் - சங்கராபரணம் - அடதாளம்.

பல்லவி.

மான் மருகா நீரிவ்வேளை வந்துகார்க்க வேணுமையா.

அநுபல்லவி.

செல்விழி தெய்வானை வள்ளி சித்தங்கிழுஞ் சுப்பையா (மான்)

சரணங்கள்.

1. ஆசையான் கொண்டுன்றன பாத அண்டினேனை காரும் எந்தா
யீசனுமா தேவிமைந்தா தேசலாவிய சீர்கந்தா (மான்)

2. பத்தியாய நின்கமல பாதம் எத்தினமும் பூசைசெய்ய
நத்தினே னின்ன மேனோ தாமதம் நாதனே நின்னருள் செய்ய (மான்)
3. சொல்லவொண்ணு தென்றனது துயரமலை போலக்காணும்
வல்லவனே கிருபை கூர்ந்து வந்துகந்தெனை யாளவேணும் (மான்)
4. புவியிற் சென்மம் எடுத்த நாண்முதல் புண்யபாவ மொன்றறியேன்
சுவைதருநின் சரண நாண்மலர் தோத்தரிக்கும் நிலைகுறியேன் (மான்)
5. பஞ்சமகா பாவஞ்செய்து பாவியாகி ஆவிசோரும்
வஞ்சநெஞ்சக மானவேழையை வந்துவேலா யுதனே காரும் (மான்)
6. திருவேரக மலைவாழ் முருகா தேவர்க்கனு கூலா சீலா
அறுமீன் காதலா அமலா விமலா அண்டர்கள் போற்றும் பழனி வேலா
7. கந்தா கடம்பா கார்த்திகேயா கங்கர்தாரர்க் கிளையசேயா
சொந்தமாயர விந்தநற்பதந் துரையேதந்தெனை யாளும் தூயா (மான்)
8. கோபாலு சாமி கோரியபடி கோதிலாநிலை யளித்த தேவா
ஆதலானினை யான்றுதித்திட அன்புட னருள்செய்ய வாவா (மான்)

வேறு சந்தம்.

ஓமைந்தினி லுற்றெழுந்த வயாறு மாமுகத்து
காமைவிழி யிந்திரன்மகள் கருதும்வள்ளி கேள்வன்
தாமைந்தொழி கோபாலற்குத் தன்பதவி தந்தோன்
கோமைந்தெழின் மயில்வாகனக் குமாரன்பதந் துணையே.

---

கீர்த்தனம். இ-ம். காம்போதி - ரூபகதாளம்.

பல்லவி.

சத்திவடி வேற்குகனே சங்கரன் றிருமகனே

அநுபல்லவி.

நத்தி துதித்தேன் சண்முகனே நற்சரவணனே (சத்தி)

சரணங்கள்.

1. இத்தரை மேலான கீர்த்தி பக்தரை நன்காண்ட மூர்த்தி
வித்தகம தானநேர்த்தியே வீயாத ஞான (சத்தி)
2. அம்பிகை யருளுமைந்தா ஆனந்தா நீதனே கந்தா
நம்பினே னெநீ வரந்தா நாதாந்த சோதி (சத்தி)
3. அருணகிரி யாரைமூவா கருணைவைத்து காத்ததேவா
தருணமெனைக் காக்கவே நீவா தயையாக மூவா (சத்தி)
4. கும்பமுனிக் குபதேசனே குன்றில்வாழ் குமரேசனே
செண்பக நதியின்வாசனே திருச்செந்தி லோனே (சத்தி)

5. சரவணப் பொய்கையனே தளிர்பன் னிருகையனே
சரணம் பணிந்தேனே ஐயனே சமயந் துய்யனே (சத்தி)

6. ஞாலம்புக ழுன்னுமங்கோ பாலனுரை செய்தபோது
சாலவாண்ட தன்மையையோது சாமியேநல்ல (சத்தி)

வேறு சந்தம்.

எகஸ்திரமான வெழுத் தெழிலாறுங் கொண்டிடைட்யான்
யோகருளத் தெளியாய்நிக ழும் பர்க்க னுகூலன்
தேகஸ்திர மபலமெனத் தெளிகோபா லன்றனது
பாகத்துறப் பதவிதந்தோன் பாதமலர் பணிவாம்.

---

கீர்த்தனம் - இ-ம். செஞ்சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி.

வடிவேலவா வா வா வடிவேலவா உமைபாலகா—வடி

அநுபல்லவி.

நாடிடும் பக்தருளத்தில் கூடிவாழ் குமரேசனே
தேடியுன்றன் பதஞ்சென்னி சூடினேனென்றனைக் கார்வடி (வேலவா)

சரணங்கள்.

1. அண்டமூ மகண்டநவ கண்டமும் வலமாய் வந்த
தெண்டாயுத பாணியே தொண்டரைக் கடைக்கண் பாரும்
மிண்ட ரக்கர்மாள பிரசண்டவேல் விடுத்த கையா
பண்டமார் தொழும்சீல தண்டனரு ள்சேயா—வடி (வேலவா)

2. மாளாப் பிறப்புமொய்க்க மீளா நரகத் துய்க்க
ஆளாக்கி வைத்தபாவம் தூளாகச் செய்யவேணும்
வாளேந்து வோன்மருகா கேளாயெந்தன் குறையை
தாளா லகற்றும்நற்கு ணாக் கிருபைசெய்—வடி (வேலவா)

3. அவனியோர் புகழ்ந்தேத்தும் ஆவினன் குடியானே
தவமென்னநான் செய்தேனோ தற்பராவின் பதம்பாட
நவரச விசையார்ந்த நான்மறைப் பொருளான
சிவகுரு நாதனேஎன் சித்தமகிழச் செய்—வடி (வேலவா)

4. பாலன் கோபாலன்றுதி பன்னிசைக் குகந்தோனே
காலன் பாசத்தி லென்னைக் கட்டிக்கொடா தன்னும்
வேலனே யென்றுதுதிக்க சீலனே யருள்செய்யும்
ஞாலந் துதிக்கு மாலகால முண்டவன் செய்—வடி (வேலவா)

வேறு சந்தம்.

போற்றியுடல் புளகாங்கிதம் பொங்கியகந் தன்னை
தேற்றிப் பரமானந்தத்தில் தேக்கிப்பல வினையை

மாற்றிநின்ற கோபாலற்கு மலரடி தந்தோனே
யேற்றிபுகழ் சாற்றிற்றுயர் எல்லா மொழிப்போமே

---

கீர்த்தனம் இ-ம். இந்துஸ்தானி.

பல்லவி.

வேலா வேலா வேலா வேலா வேலின் நாதனே

அநுபல்லவி.

வேன்முருகா மான்மருகா வேத போதனே (வேலா)

சரணங்கள்.

1. ஞாலமீது நானுதித்து நலிந்தே னுனுமே
சோலமயின் மீதுகந்த குமரா ஆளுமே (வேலா)

2. அபயமென்ற அமரரை ஆதரித்தவ னீயே
உபயபாதந் தஞ்சமென்றே னுதவி செய்வாயே (வேலா)

3. வேங்கைமர மாகியே நின்றாய் வெற்றிவேற் கையா
ஏங்கிவாடு மெளியேன்முக மிரங்கிப் பாரையா (வேலா)

4. செந்தில் வளர்கந்தனே நின்செம்பொற் பாதமே
சிந்தைதனில் நினைக்கவருள் செய்வாய் போதமே (வேலா)

5. முந்தகோபாலன் தன்னையாண்ட முருகா நீருமே
யென்றன்பங்கி லெந்தநாளு மிருந்து காருமே (வேலா)

வேறு சந்தம்.

ஆமே நனியுல கேழையு மன்பாய் வலம் வந்தோன்
மாமேரு வில்லுடையோன் மகிழ் மாண்பார் கதிரேசன்
தாமே யருட்கோ பாலனைத் தயவா யழைத்துகந்து
தீமைதவிர்த் தாண்டோன்றனைத் தினமுமற வோமே.

---

கீர்த்தனம் இ-ம். பூரிகல்யாணி - ஆதிதாளம்.

பல்லவி.

திகழும் பழனிபுரி க்ஷேத்திரப் பெருமை சொல்ல
ஜென்ம சாபல் லயமாகுமே. (திகழும்)

அநுபல்லவி.

புகழுமிப் பாரினில் புண்யபுரி யிதைப்போல்
புவியினிற் கண்டதில்லை புதுமை நானென்ன சொல்வேன் (திக)

சரணங்கள்.

1. அருமறை யோதிடும் அந்தணர் வீதியில்
அரஹரா எனவொலி ஆரவா ரிப்பதா்

தருமநெறி தவரா தார்பதி வீதியில்
தானமென் ஞான்குந் தழைத்தோங்கி வளர்வதும்
ஒருமை வணிகர் வாழும் ஒப்பில்லா வீதியில்
ஓம்சர வணபவ மெனுமந்தர முரைப்பதும்
பெருமை சூத்திரர்வாழும் பேசரும் வீதியில்
பேடைமயி லன்னம்போல் பெண்க ளுலாவலும்
பேர்புகழ் வேலவன் சீர்புகழ் கோயிலில்
ஏர்புகழ் கோபுர வெழுலுறு வாயிலில்
சங்கொலி தங்கிய இங்கித மங்கள (திகழும்)

2. சரவணப் பொய்கையில் ஸ்நானஞ்செய்து தருமங்
கரமதா லளித்தவர் பரமபத மெய்தலும்
சிரவணஞ் செய்தோர்க்கு சிவசுதன் வரந்தர
பெருமை பெருமலைமேல் அருள்சுரந் தோங்கலும்
துறவணிந் தோர்துதி தூயமா கிரிவலம்
வருகும்போ தவருரை வாய்மையு மறைகளும்
பெருவணை யுருவையா புரிதீர்த்த மதில்நேர்ந்த
அருமைக்கா வடிகொண்டங் களிப்போலை யாள்தலும்
அமரர் இடர்தவிர்த்த ஐய னடியைப்போற்ற
தவறிலா துதிசாற்ற தாங்கிமயின் மேலேற்ற
சரவண பவகுக னுரிமையுடனே நாளும் (திகழும்

3. காலன்கா லன்சுதனை கண்டுநின் றடிமா
கவிபாடி துதிநாடி காருண்யத்தைக் கொண்டாடி
சீலமுடன் றுதிக்கும் செம்மைசேர் அன்பருந்
தேசத்தே சத்தவர்கள் பூசை புரிபவருங்
கோலிவிச் சித்திரமாம் குமர குருபரனை
குழந்தை வடிவேலனைக் குறமாது லோலனை
மேலாம் பரமகுரு வேதவே தாந்தனை
வேலன் முருகாவென வியந்தா னந்தமுடனே
மேதினி தனிலுள்ளோர் மேன்மையாய்ப் படிப்பதும்
சோதனைக் காவடி தொழுதங்கெ கொடுப்பதும்
துதிப்பவர் நிதியொடு கதிபெற நிற்பதாம் (திகழும்

4. மலைமீதுள்ள திவ்விய வள்ளியம்மை தீர்த்தமும்
மாசிலா முனிவர்கள் மாதவத் தோத்திரமும்
கலைமான் புலித்தோலுடன் காவியணிந் தவர்க்கு
கானில்வாழ் மந்திவால் கைலாகு கொடுப்பதும்
நிலையாகிய முனிவர் நிதமோதும் வேதத்தை
நினைவுடன் கிள்ளைகள் நெறிமுறை படிப்பதும்
முலைதாவி செல்பவர் மங்கைமா ருடன்கூடி

கலைஅவிழ்ந் திடவோடி கருணைக்தக் கூத்தாடி
ஆலைமடற் றயின்றோன்பே ரமைந்தகோ பாலனங்கே
அறுமுக னடியிணை பெருமையா யடைந்ததும்
ஆதார சிவ சிவ ஆனந்த மயமதாய் (செழும்)

வேறு-சந்தம்

வன்சமரில் சூரபத்மன் வலிகுன்ற வேலேந்தி
தன்சமர்த்தைக் குயர்வொப்பிலா சண்முகனை பன்னி
மின்சமர முடிவைத்த வீராறுப் கோபாலன்
மன்சொல் விளைக்கேட்டோர் கலிவேளை மறவாரே.

---

கீர்த்தனம் - இ-ம். ஹிந்துஸ்தானி—ஆடதாளம்.

பல்லவி.

தண்டாயுதபாணியே நின் தாண்மலர்க்கென் சரணம் சரணம் ()

அநுபல்லவி.

மிண்டரக்கர் வலுமைகுன்ற மிகவுமூக்க முடனேவென்ற
மெய்யா மெய்யா மெய்யா சரணம் (தண்டாயுத)

சரணங்கள்.

அண்டரிடரை தீர்த்தழவா ஆனந்தமோன மானதேவா
அருள்வாய் அருள்வாய் அருள்வாய் சரணம் (தண்டாயுத)

1. அத்தி புரிந்தோன் தனைய சேயா
அருணகிரி யார்க்கு கந்த நேயா
ஐயா ஐயா ஐயா சரணம் (தண்டாயுத)

2. வேணு கோபாலன் தனது மருகா
வேக்கை மாம தானை முருகா
வேலா வேலா வேலா சரணம் (தண்டாயுத)

3. உம்பர் அயரை தீர்த்த வேலா
உத்தமர் வினைய கற்றும் லோலா
உசிதா உசிதா உசிதா சரணம் (தண்டாயுத)

4. தோகை மாமயி லேறுந் தந்திரா
சுப்பிர மணிய ஞை சுந்தரா
சுதனே சுதனே சுதனே சரணம் (தண்டாயுத)

5. பக்த ருளத்தில் வாழும் நாதா
பழனி மலைவாழ் கமல பாதா
பரனே பரனே பரனே சரணம் (தண்டாயுத)

6\. கோழிக் கொடியுயிலங்க முந்த
கோபா லனையாள வந்த
குமரா குமரா குமரா சரணம் (தண்டாயுத)

வேறு சந்தம்.

வாயிற்பற்கள் கழலச்சொற்கள் குழறவலி தளர்ந்து
தேயுமெய்யுந் தலைப்பனிப்புஞ் சேர்காலம் வந்திடுமுன்
தாயகமாய் கோபாலற்குச் சாருபந் தந்ததுபோல்
நாயினேற்குந் தந்தருளும் நாதா வறுமுகனே.

---

கீர்த்தனம் - இ-ம். தோடி—ஆதிதாளம்.

பல்லவி.

அடியேனு னுனதடி குடிபுக வரமருள்வாய் வடிவேலோனே (அடியே)

அநுபல்லவி.

1\. படிதனிற் புனிதமும் பொடியணி யடியவர்க்
கடிமைசெய் வோர்பத மென்முடி யணிந்துய்ந்திட
கொடியினி லாண்டலை கொடியசைய வந்தாளுந்
துடியுடைய வேற்கையா மிடிதவிர் முருகையா (அடி)

2\. பெருத்த புவியிற்கலை யருத்தமுறை வழியிற்
றிருத்த மிலாதுபவ முறுத்த முற்றிலுமெனை
வருத்து மாயையைத் தவிரத்திருத்துஞ் சமனிலையிற்
கருத்து பதியவையுன் னிருத்தம் தெரிசிக்கவே (அடி)

3\. அமரரிடுக்க ணீங்க வசுரரை முனிவொடு
சமரதனில் வதைசெய் சண்முக தேவனே
தவறவிடாதெனை யாள்சரண் புகுந்தே னையனே
குமர குருபரனே குஞ்சரி லோலனே (அடி)

4\. திரிபுர னீன்றருள் சேயாகுகா சண்முகா
அரிமருகா முருகா ஆனந்தத் தாண்டவா
கரிமுகற் கிளையவா கானமயி லூருவாய்
பரிவுட னுனைத்தொழும் பதமெனக் கருள்செயும் (அடி)

5\. கஞ்சமல ரானினை யஞ்சவி செய்திட
மிஞ்சிய சிறைபடுத் தஞ்சலா சேவகா
பஞ்சமா பாதக னெஞ்சமதி லஞ்சுவாய்
கஞ்சமென் றன்னருள் கெஞ்சினே னுதரி (அடி)

6\. கெதியெனுங் கோபாலன் றுதிமற வாதவா
ததியினி லெனக்குன்ற னிதிகொடுத் தாண்டருள்
துதிபரவுந் தேசிகா யதிகமறை வாசிகா
சதிசெய் வினையை தவிர்த்தாண் டருள் ப்ரகாசிகா (அடி)

கீர்த்தனம் - ராகம். அசாவேரி—அடதாளம்

பல்லவி.

வெற்றி வேலவா பராசக்தி பாலகா

அநுபல்லவி.

நத்தினேன் காரும் உன்றன் நற்பதந் தாரும்

சரணங்கள்.

1. அன்னை தந்தைநீ யல்லால் அவனியிலுண்டோ
என்னைக் காத்திட வாராயேத்தி போற்றினேன் (வெற்றி)
2. பாதமாமலர் அடியேன் பற்றினேனையா
வாதை தவிர்த்தாள் மயில் வாகனமெய்யா (வெற்றி)
3. கோதில்வானவர் தன் குறையை தீர்த்தவா
குன்றவில்லியோ னருள் குமரனே தேவா (வெற்றி)
4. தருபஞ்சாயுதக் கண்ணன்றன் மருகோனே
தாயக மெனக்கான சண்முகக் கோனே (வெற்றி)
5. ஆடுமாமயில் மீது அஞ்சலென்று நீ
வாடு மேழையை காக்க வந்தருளுவார் (வெற்றி)
6. நம்புங் கோபாலன் பாவில் நாடிவந்தவா
அம்புவிதனி லன்பர்க்கருள் சுரந்தவா (வெற்றி)

---

## நொண்டிச்சிந்து.

வேலாநின் சரணம் வெற்றிமயில் - மேல்வருவோனே நின்சரணம்
மூலா பரமகுரு மூர்த்தியாய் - முளைத்த முச்சுடரே நின்சரணம்
கோலா கலமேலாவா தெய்வானை - குறவள்ளி நாயகா குணசீலா
சூலாயுதன் புதல்வா சுரர்களின் - துயர்களைத் தருவிய தனிமுதல்வா
ஐயா நினைப்பணிந்தேன் எனக் - காதரவாய் வந்துன்னருள் புரிவாய்
துய்யா சுப்பிரமணியா இந்த - தொல்லுலகை வலம்வந்த தூய்மணியே
மெய்யா வுயர்பரனே என்றன் - வேதனை யகற்றிமீ தானம்வையே
வையா புரித்தலைவா நற்திரு - வாவினங் குடிதனில் வாழ்முருகா
பூமிதனில் நானுய்ப் பிறந்தும் - புண்ணிய பாவமொன் றறியேன்
காமியென வுழன்றேன் யாதொரு - காரண காரியந் தானறியேன் [தேன்
நாமந் துதித்தறியேன் என்றனும் - காடு முடற்கிரை தேடிநான் மெலிந்
தேமெனும் பொருளறியேன் எனக்கினி - குற்றமினை நீயன்றி வேறறியேன்
கோரிவினைத் துதித்துக் கூவிய - கோபாலன் றனக்குயர் பதமளித்து
மாரி யெனவருளை வழங்கிய - மாதவப் பேறேமணி விளக்கே
நாலாம் பதமருளுங் காங்கேயா - நாடினேன் நின்பதந் தேடினேனே
காலாயுதத்துவசா அடியேனை - காத்தருள் புரிந்திடும் கார்த்திகேயா (வேலா)

கீர்த்தனம் - இ-ம். கேதாரகௌளம் - ஆதிதாளம்.

பல்லவி.

கருணா சரசர வணபவனே கடாக்ஷிப்பாய் சண்முகனே.

அநுபல்லவி.

தருணம் வந்தேன் றனைத் தற்காத்து இரட்சிக்கத்
தரைமீதினி லுனைவிட்டிலை முருகேசனே திருவாசனே (கருணாகர)

சரணங்கள்.

1. பாதார விந்தமலர்ப் பணிந்தேன்—நிசபக்தர்
கொண்டாடிடும் (பாதார)

ஆதாரம் நீயல்லால் அவனியில் வேறில்லை
ஆவினன் குடியானே அமரர்தங் கோமானே
சேவைதரு வாய்நற் சேவற் கொடியோனே
திருவாரரி மருகாவொரு முருகாவா மருள்வாய் கதி (கருணாகர)

2. பாரில்நான் சனித்த நாள்முதலாய்—பாச
பந்தத்தாற் கெட்டயர்ந்தேன் (பாரில்)

நரிக் கிரையாக வுடலை வளர்த்திட்டேன்
உண்ப தேரீதியாம் உன்னை மறந்திட்டேன்
நாரியர் ஆசைவலை யாலுலர்ந் திட்டேன்
நயபங்கய பதந்தந்தெனை தயவாயெனக் கருள்கந்தனே (கருணாக

3. வேதாந்தத்தின் மோனசின் மயனே—மெஞ்
ஞான நாதா கந்தா (வேதாந்த,

போதாந்தப் புனிதர் போற்றி வணங்கிடும்
புயல்கண்டு நடமாடும் மயில்மீ திலங்கிடும்
நாதா நளிர்மலர்ப் பாதாவினை நம்பும்
நடுங்கின்றிடு வடுமாறவி ரடியேனுய வருளாயுயர் (கருணாகர)

4. வானோர் துயர் தீர்த்தருள் சுப்பிரமணியா—மா
மயிலேறுங் கன்யா (வானோர்)

ஆனோர் புகழுங் கோபாலனை யாட்கொண்ட
ஆறுமுக வேலா வடியனென் றுனைவேண்ட
ஈனனொருபாவி யாகிலும் நற்றொண்ட
னயமேவிய மெலுமாவய முறுமாரு வெனக்கே யொளிர்(கருணா)

---

கீர்த்தனம் - இ—ம். கேதார் கௌளம் — ஒரடி தாளம்.

பல்லவி.

இம்மாநிலம் புகழ்முருகா நம்மாழ்வாரின் கோன்மருகா.

அநுபல்லவி.

அம்மானேந்து வோன்றனையா எம்மானே வந்தாளுமையா (இம்மா)

சரணங்கள்.

1. சரவணை தனிலுதித்து சத்திவேற் கரந் தரித்து
அரவணிந் தோன்வலது செவியி லருள்செய்த வனீஎன்றே னல்லால்
குறவன் மகளைக்கொண்டா யென்றேனோ சிறுத்தொண்டன் மகவைக்
கொல்ல வந்தோன் குழந்தை என்றேனோ—இது
தருண மென்னைவந்து காரும் தயாநிதியே சண்முகா
அருண்ணொளி வீசும் வேலா அபயமென்றே னோடி வருவாய் (இம்மா)

2. காலதண்டம் பிண்டிபாலம் கண்டகோபாலிதோ மரமேந்தி [லால்
ஞாலமதை யொடுக்குஞ் சூரனை வேல்கொண்டு வென்றுயென்றே னல்
ஏலவிரந்தோன் பாலனென்றேனோ கன்னியர் கற்பை
சால வழித்தோன் மருகனென் றேனோ சத்தி
வேல்முருகா என்னை சேர்க்க வெற்றிமயின் மீதில்வாரும்
சாலவுநா னினைந்துதித்தேன் தஞ்சமென்றே னென்னைக்காரும்(இம்மாநி)

3. அமாரிடுக் கணைதனைநீக்க சமரில்சூரன் றன்னைவென்ற
குமரகுரு பரமுருகன் குழந்தைவேலன் என்றே னல்லால்
குறத்திமையல் கொண்டோ னென்றேனோ ஆறுவாகன
குளக்கண்ண னருந்துணைவ னென்றேனோ என்னை
தளரவிடாது வந்து வந்து தற்காத்திட வேணு மென்று
விமரிசை யாயுனைப் பணிந்தேன் வியனருளை தந்தாளின்று (இம்மாநி)

4. கோதிலா துனதுநாமங் கோரின கோபாலன் றன்னை
தீதில்லாம லன்றாட்கொண்ட செந்தில்வாச னென்றே னல்லால்
ஓதும்வேங் கையானு யென்றேனோ அம்பலத்தாடும்
வாதப்பா தன்சேய னென்றேனோ எ
வாதனை யகற்றிநல்ல வாழ்வுதந்தே யாளவேண்டும்
ஓதினேன் நின் திருநாமம் ஓடிவந்தே யாளுமின்று (இம்மாநி)

கீர்த்தனம் - இ—ம். கமாச - அடதாளம்

பல்லவி.

ஐயவோ வேலா உமைபாலா அனுகூலா சமூல—ஒ (ஐய)

அநுபல்லவி.

மெய்யனே குஞ்சரி லோலா மேதக மான சீலா
ஐய்யனே நானுய்ய வேயருள் செய்யவே வரு
வாய் முன்னூன்கு கையா—ஒ (ஐய)

சரணங்கள்.

1. கலியுகத் துற்றசேயே கண்கண்ட தெய்வம் நீயே
நலியுமென்ன கஷ்டமி யகன்றமெய் வலியு கந்திட
பொலிதர வெழுந் செய்யா—ஒ (ஐயவோ)
2. சோதி சொரூப நாதா சோதிக்க லாமோ நீதா
எது சகிக்கபோ கதி போதுமிப் போது பாது
காத்தாளும் ஏகசையா—ஒ (ஐயவோ)
3. முற்றுஞ் சோதித் தாலியானே முறையாரிடஞ் சொல்வேனே
குற்ற மெத்தனை தாணியற்றினு முற்றுமே
யே யெம் பெற்ற நாதனேயினி காருய்—ஒ (ஐயவோ)
4. பாலன் கோபா லன்றானே பகரப்பகந் தந்தோனே
ஞாலம திற்றுயர் சாலவுங் கொள லமோ
பாவர்கள் பால சுப்பிர மணியா—ஒ (ஐயவோ)

———

வேலாயுதன் திருநடனம்.

கீர்த்தனம் - பூரிகல்யாணி - திரிபுடைதாளம்.

பல்லவி.

வேலாயுதன் திருநடன வித்தையை நான் என்ன சொல்வேன் (வேலா)

அநுபல்லவி.

சூலாயுத னுமைமகிழ தோகைமாமயில் மீதிலேறியே
ஜெகு ஜெகெண திம் திமியென (வேலாயுதன்)

சரணங்கள்.

1. ஆழியைக் கடைந் தமரராட
அண்ட பிண்டமு முண்டுடைட
கோழிக் கொடி யசைந்தாட
குன்ற வில்லியு மகிழ்ந்தாட
வேழ மாமுகன் மூஷிகமாட
வேதனுமா வாணியு மாட
தாழ்வில்லாத முனிவர்க ளாட

தண்டைக் கிண்கிணி நூபுர மாட
தண்டாமரை வண்டார்குழல் கண்டோடி சென்டாடி
ஜெகு ஜெகெனை திம் திமியென (வேலாயுதன்)

2. சத்திவேல் செங்கரத்தி லாட
பத்தர்கள் சிரம்பணிந்தே யாட
நத்திடு மாமறைக ளாட
நாரதன் சங்கீதம் பாட
மூத்தர்கள் பூமாரி பெய்யாட
மேனகை ரம்பை யூர்வசியாட
கற்றைவார் சடைசித்தர்க ளாட
கானமாமயில் களித்துக் கொண்டாட
கருணாகர பெருமாநிதி யொருமாமுதல் குருவாம்வடி (வேலாயுதன்)

3 சேடனுந் தலைகளித் தங்காட
திக்குப் பாலகரும் கின்னூட
தோடவிழ் பூங்குழலாள் வள்ளி
தோகையுந் தெய்வானை யாட
பாடும் நாரதர் வீணைமீட்ட
பாவலரா ரவாரம் கீட்ட
கூடும்வேதன் தாளங் கொட்ட
கோபால கிருஷ்ணன் மத்தளம்தட்ட
கோலாகல பாவா கோபாலாவென மேலாகென (வேலாயுதன்)

---

தெலுகு கீர்த்தனம் இராகம் - பூபாளம் - ரூபகதாளம்.

பல்லவி.

பேதை நீ கன்னாற ஜூடையா - ஓ ஓ சுப்பையா
பேதை நீ கண்ணாற ஜூடையா.

அநுபல்லவி.

சாது ஜனுலுகோரட்டி பாதமுனே நம்மி ஞனு (பேதை)

சரணங்கள்.

1. தேவுலு கருலுலுனு பூவுலு கோனி பூஜின்ச
ரேவுலு சேர்ச்சின நீவு பாபில வாக்யமு வினி (பேதை)
2. என்தனே பாபமு சேஸி சின்தலோ படின நனு
பன்தமு லாக நீ பதம் ஸொந்தமே சேஸின்சு வையா (பேதை)
3. ஞாலு வீரமு சின்த தீரமு தோட்டி முந்த
கூரயிலு தோனி சம்பி ஹோமு சேர்ச்சின வையா (பேதை)
4. நம்மின கோபாலுடனி ரம்மியமு தோனு வல
கொம்மனி தம்முடா நனுநீ ஸொம்முக்கா சேயன்சகோ வையா.

## கீர்த்தனம் - இ-ம். கல்யாணி - ஆதிதாளம்.

### பல்லவி.

மங்கள மங்களமே ஜெய சய
மங்கள மங்களமே.

### அநுபல்லவி.

சங்கர னருளிய சண்முக வேலவர்க்கும்
அங்கவ நன்பருக்கும் அருந்தவ முனிவர்க்கும் (மங்கள)

### சரணங்கள்.

1. ஆரண மாகம முணர்ந்தவர் தமர்கட்கும்
அகத்திய முனிவர்க்கும் அருணகிரி நாதர்க்கும்
சீரணி முத்தருக்கும் சித்தர்க்கும் பக்தருக்கும்
தேவர்க்கு நற்குமார தேவர் தமக்குஞ்—சய (மங்கள)

2. இருளாண வமகன்ற இருடிகளி யாவருக்கும்
இயலிசை நாடக முத்தமிழ்ப் புலவர்க்கும்
அருளானந்த கீர்த்தன மருகுறவை யனுக்கும்
ஆனந்த மாய்ப்பாடிய அடியேன் சின்னுசாமிக்கும் (மங்கள)

3. மாதவம் புரிந்தின்ற மாதா பிதாக்களுக்கும்
மன்னும் நான்மறையோதி மதித்த குருவிற்கும்
வேதம் புகழும்ஞான வெற்றிவடி வேலிற்கும்
மேவு மச்சினி விட்டமுருகேச நாயகற்கும் (மங்கள)

4. நாதன் கீதங்கள்பாடி நடிக்கும் நண்பர்தமக்கும்
நற்றிரு வருளார்ந்த ஞானவி கிசையோர்க்கும்
பூதன்காதன் றன் சேவை புகழும் கோபாலனுக்கும்
புவிபுரக்கும் புண்ணிய வான்க ளனைவருக்கும் (மங்கள)

---

## வாழி விருத்தம்.

வாழி தானவரைக் கொன்று வானவர் அன்பன் தீர்த்தோன்
வாழி [illegible] சன்றன்னை வாஞ்சையாய் [illegible] சற்றும்
வாழி அருளா னந்தக் கீர்த்தனம் வழுத்தி னுறும்
வாழி தீர்த்திட்டிந்த வாஞ்சையுள் ளோர்க்கு மாதோ.

வேலாயுதக்கடவுள் துணை.

முற்றிற்று.

---

## முத்தமிழ்வா

### திருமந்

முற்றுப்பெற்றது. உயர்ந்த இக்கு காகிதத்
ருக்கிறது. ...லாயனர் கலர்பட
பட்டிருக்கிறது. இதுவே அழகான பி
...செய்த புத்தக...து.

பெரியபுராணம் மூலமும் அரும்பதக் குறிப்புரையு
டிம்மி 8-பாரங்கொண்ட மாதாந்த சஞ்சிகையாக
கின்றது. ...தற்காண்டம் முற்றுப்பெற்றது. இ
காண்டம் ...சஞ்சிகையில் பூர்த்தியாகும். இருக
களும் இப்போதே முன்பணமாக அனுப்பினால் ரூ. 1
புத்தக முடிந்தபின் ... ... ...

கந்தபுராணச் சுருக்கம் - சம்பந்தசரணாலய ஸ்வாமிகள்
செய்த மூலமும், பொழிப்புரையும், விருத்தியும், ...ரக்
கோவைப் பிள்ளைத்தமிழும். சுமார் 500-பக்கங்களை யுடை
யது. கலிகோபயிண்டு செய்யப்பட்டது ... ... 2-

சிவப்பிரகாச மூலமும், ஓரடிகள் இயற்றிய சிறந்த உரையும்,
கலிகோபயிண்டு செய்யப்பட்டது ... ... ... 1

பேரானந்தசித்தியார், இதுகாறும் வெளிவராதது ... ... 0

கந்தநாயகர் தோத்திரம் - திருமுருகாற்றுப்படையும், கந்தரநு
பூதியும், சில திருப்புகழ்களும், பிறவும் ... ... 0—1—0

சுந்தரமூர்த்திஸ்வாமிகள் தேவாரம் முற்றிலும், சுத்தபதிப்பு ... 0—6—0

ஏகாதசிபுராணம் - மூலமும், அரும்பதவுரையும் ... ... 0—3—0

திருவிளையாடற்புராணம், மூலமும், அரும்பதக் குறிப்புரையும்,
கலிகோபயிண்டு செய்யப்பட்டது ... ... ... 1—8—0

தாயுமானவர் பாடல் சுத்தபதிப்பு ... ... ... 0—6—0

இங்ஙனம்,

திரு. வி. உலகநாத முதலியார்,

42, பிள்ளையார்கோயில் வீதி, ...பேட்டை, சென்னை